# பொதுத் (தேர்தல்கள்) துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

## 2024-2025

## மானியக் கோரிக்கை எண்.38

துரைமுருகன்

நீர்வளத்துறை அமைச்சர்

©

தமிழ்நாடு அரசு

2024

## மானியக் கோரிக்கை எண். 38.02 தேர்தல்கள்

## கொள்கை விளக்கக் குறிப்பு

மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தையும்,உரிமையையும் பொறுத்து, ஒருநாட்டின் வளர்ச்சி நிர்ணயிக்கப்படுகிறது. இந்தியா, சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து ஒரு ஜனநாயக நாடாக இருந்துவரும்நிலையில், சாதாரண குடிமக்கள் தங்கள் கருத்தை வலியுறுத்தவும், எடுத்துரைக்கவும் மற்றும்தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவும் வாய்ப்பளிக்கிறது.

இந்தியத் தேர்தல் ஆணையமானது, தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் இரு தேர்தல் ஆணையர்களைக் கொண்ட அமைப்பாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 324-ன்கீழ், வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, மேற்பார்வை, நெறிப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றின்மூலம் வாக்காளர் பட்டியல்களை

தயாரித்தல், மக்களவை மற்றும் மாநில சட்டமன்றத்திற்கான அனைத்துத் தேர்தல்களை நடத்துதல், குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் பதவிகளுக்கான தேர்தல்களை நடத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.

மாநிலத்தில், தேர்தல் துறையின் தலைவராகச் செயல்படும் தலைமைத் தேர்தல் அதிகாரி, 1951-ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின்படி, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளை ஏற்று செயல்படுத்துகின்றார். மாவட்ட அளவில், பொதுத் (தேர்தல்கள்) துறை மற்றும் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி, அனைத்து பணிகளையும் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்கள் அனைவரும் மாவட்டத் தேர்தல் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாவட்டத்திற்கு,

பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர், மாவட்டத் தேர்தல் அதிகாரியாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

பின்வரும் பணியாளர்கள் மாவட்டத் தேர்தல் அதிகாரிக்கு உதவுகின்றனர்:

i)வாக்காளர் பட்டியல் தயாரிப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கு வாக்காளர் பதிவு அதிகாரிகள் (Electoral Registration Officers - EROs) மற்றும் உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகள் (Assistant Electoral Registration Officers - AEROs).

ii) தேர்தல் நடத்தும் பணிகளுக்கு தேர்தல் நடத்தும் அதிகாரிகள் (Returning Officers - ROs) மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகள் (Assistant Returning Officers - AROs).

iii) ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் வாக்குச்சாவடி நிலை அலுவலர் (Booth Level Officer - BLO).

பொதுவாக வருவாய்க் கோட்ட அலுவலர்கள் நிலையில் உள்ளோர் வாக்காளர் பதிவு அதிகாரிகளாகவும்,

மாநகராட்சிப் பகுதிகளுக்குட்பட்ட தொகுதிகளுக்கு மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் துணை ஆணையர்கள் வாக்காளர் பதிவு அதிகாரிகளாகவும் உள்ளனர். சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை, பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலர்கள், அந்தந்த மண்டலங்களுக்குரிய வாக்காளர் பதிவு அதிகாரிகளாகச் செயல்படுகின்றனர். வட்டாட்சியர்கள் மற்றும் நகராட்சி ஆணையர்கள், மாநகராட்சி மண்டலப் பகுதிகளில் சம்பந்தப்பட்ட உதவி வருவாய் அலுவலர்கள் மற்றும் செயற்பொறியாளர்கள் அந்தந்த மண்டலங்களுக்குரிய உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

## 1. 2024-2025-இன் முக்கிய நிகழ்வுகள்

### 1.1. வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம்,2024

1950-ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டப் பிரிவு 21-ன்படி, ஒவ்வொரு மக்களவை அல்லது மாநில

சட்டமன்றப் பேரவைப் பொதுத்தேர்தல்கள் மற்றும் தற்காலிகமாக ஏற்படும் காலியிடத்திற்கான இடைத்தேர்தலுக்கு முன்பு சட்டமன்ற தொகுதிகளின் வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யப்படுகிறது. சட்டமன்ற தொகுதிகளின் வாக்காளர் பட்டியல் திருத்தம் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின் அடிப்படையில் எந்த ஒரு வருடத்திலும் குறிப்பிட்ட தகுதியேற்படுத்தும் தேதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

01.01.2024-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்ட புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தமானது கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட்டது:

| | |
|---|---|
| வரைவுப் பட்டியல் வெளியீடு | **27.10.2023** |
| கோரிக்கை/மறுப்புரை அளிக்க கடைசி தேதி | **09.12.2023** |
| இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு | **22.01.2024** |

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, மேற்குறிப்பிட்ட வாக்காளர் பட்டியல் திருத்தத்தில், வாக்காளர் பட்டியலில் இடம் பெற்ற சேர்த்தல்கள் / நீக்குதல்கள் / திருத்தங்கள் பின்வருமாறு:

| | ஆண் | பெண் | மூன்றாம் பாலினம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சேர்த்தல்கள் | 6,17,623 | 7,43,803 | 462 | 13,61,888 |
| நீக்குதல்கள் | 2,89,818 | 3,12,737 | 182 | 6,02,737 |
| திருத்தங்கள் | 1,64,487 | 1,59,343 | 167 | 3,23,997 |

கீழ்க்குறிப்பிட்ட விவரங்களின்படி, 22.01.2024 அன்று இறுதி வாக்காளர் பட்டியலில் மொத்தம் 6.19 கோடி வாக்காளர்கள் உள்ளனர்:

| | ஆண் | பெண் | மூன்றாம் பாலினம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பொது வாக்காளர்கள் | 3,03,96,330 | 3,14,85,724 | 8,294 | 6,18,90,348 |
| பணித் தொகுதி வாக்காளர்கள் | 69,372 | 1,901 | 0 | 71,273 |
| மொத்தம் | 3,04,65,702 | 3,14,87,625 | 8,294 | 6,19,61,621 |

### 1.2. புகைப்படத்துடன் கூடிய வாக்குச்சாவடி நிலைய சீரமைப்பு, 2024

புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல்களின் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 2024-இன் முன் திருத்த நடவடிக்கையாக, வாக்குச்சாவடிகளின் சீரமைப்பு மற்றும் பிரிவுகளை உருவாக்குதல் ஆகியவற்றை மேற்கொள்வதற்கும் மற்றும் கிராம மற்றும் நகரப் பகுதிகளில் 1500 வாக்காளர்களுக்கு மேற்பட்ட வாக்காளர்களைக் கொண்ட அனைத்து வாக்குச் சாவடிகளை சீரமைக்கவும்/ திருத்தியமைக்கவும் இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. 1500-க்கும் மேற்பட்ட வாக்காளர்கள் கொண்ட வாக்குச் சாவடிகளுக்கு புதிய பகுதிகளை உருவாக்குதல் / இடம் மாற்றம் / கட்டடம் / பிரிவுகளின் மறுசீரமைப்பு / இணைப்பு / வாக்குச் சாவடிகளின் பெயர் மாற்றம் ஆகியவற்றுக்காக அனைத்து மாவட்டத் தேர்தல் அதிகாரிகளிடமிருந்தும்

பெறப்பட்ட கருத்துருக்கள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு,இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு பரிந்துரைக்கப்பட்டன. கட்டுப்பாட்டு அட்டவணை தரவுத்தளத்தில் மாற்றங்களை மேற்கொள்ளக் கோரி, இந்தியத் தேர்தல் ஆணையத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட அக்கருத்துருக்கள், அனைத்து மாவட்டத் தேர்தல் அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டன. புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல்களின் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 2024-இன்படி வாக்குச்சாவடி நிலைய சீரமைப்பிற்குப் பின், மொத்த வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை 68036-லிருந்து 68144-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**1.3. மக்களவைத் தேர்தல்கள், 2024 மற்றும் 233. விளவன்கோடு சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தல்களில் பயன்படுத்துவதற்கான திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் தயாரித்தல்**

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1950-ன்படி வேட்புமனுத் தாக்கலுக்கான இறுதி நாள் முதல் தேர்தல்கள் முடிவடையும் நாள் வரையிலான காலம் நீங்கலாக, வாக்காளர் பட்டியல்களின் திருத்தம் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது. 22.01.2024 முதல் 27.03.2024 (வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான கடைசி நாள்) வரை தொடர் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, கீழ்க்காணும் சேர்த்தல்கள், நீக்கல்கள் மற்றும் திருத்தங்கள் செய்யப்பட்டன:

| | **ஆண்** | **பெண்** | **மூன்றாம் பாலினம்** | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| **சேர்த்தல்கள்** | 2,02,076 | 2,12,267 | 166 | 4,14,509 |
| **நீக்குதல்கள்** | 69,780 | 75,681 | 35 | 1,45,496 |
| **திருத்தங்கள்** | 1,68,257 | 1,56,707 | 84 | 3,25,048 |

மக்களவை பொதுத் தேர்தல்கள், 2024 மற்றும் 233.விளவன்கோடு சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தல் நடைபெற்றபோது மாநிலத்தில் வாக்காளர் பட்டியலில் இருந்த 6.24 கோடி வாக்காளர்கள் விவரம் பின்வருமாறு:

| | **ஆண்** | **பெண்** | **மூன்றாம் பாலினம்** | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| **பொது வாக்காளர்கள்** | **3,06,05,793** | **3,17,19,665** | **8,467** | **6,23,33,925** |
| **பணித் தொகுதி வாக்காளர்கள்** | **69,115** | **1,907** | **0** | **71,022** |
| **மொத்தம்** | **3,06,74,908** | **3,17,21,572** | **8,467** | **6,24,04,947** |

**1.4. அ,மக்களவை பொதுத் தேர்தல்கள், 2024**

19.04.2024 அன்று பதினெட்டாவது மக்களவை பொதுத்தேர்தல் நடைபெற்றது. 04.06.2024 அன்று வாக்கு எண்ணிக்கை நடைபெற்று, முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

**ஆ, 233. விளவன்கோடு சட்டமன்ற இடைத்தேர்தல், 2024**

இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்தவாறு, தமிழகத்தில், 233.விளவன்கோடு சட்டமன்ற இடைத்தேர்தல்வாக்குப்பதிவு 19.04.2024அன்றும், வாக்கு எண்ணிக்கை 04.06.2024அன்றும் நடைபெற்றது.

**1.5. தேசிய வாக்காளர் தினம், 2024**

இந்தியத் தேர்தல் ஆணையம், தன்னுடைய நிறுவன தினமான ஜனவரி 25-ஆம் தேதியை தேசிய வாக்காளர் தினமாக, 2011-ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடி வருகின்றது. 2024-ஆம் ஆண்டின் தேசிய வாக்காளர் தினத்தின் முக்கிய குறிக்கோள், "**வாக்களிப்பதே சிறந்தது நிச்சயம் வாக்களிப்பேன்**" என்பதாகும்.

பதினான்காவது தேசிய வாக்காளர் தினமானது மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் மற்றும் மாநிலத்தின்

அனைத்து வாக்குச் சாவடி அமைவிடங்களிலும் என தமிழகமெங்கும் கொண்டாடப்பட்டது. இந்த ஆண்டு ஜனவரி 25-ஆம் நாள் மாநில அளவிலான தேசிய வாக்காளர் தினம் கலைவாணர் அரங்கத்தில் மேதகு தமிழக ஆளுநர் தலைமையில் சிறப்பாக நடத்தப்பட்டது. தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டம் தொடர்பாக பள்ளி, கல்லூரி மாணவர்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு மாநில அளவில் நடைபெற்ற தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டத்தில் பரிசுகள் வழங்கப்பட்டன.

மேலும், 2024-ஆம் ஆண்டு குடியரசு தின விழா அணி வகுப்பின் போது பொதுத் (தேர்தல்கள்) துறையின் சார்பில் ஒப்பனைக் காட்சி ஊர்தியும் இடம் பெற்றது. வாக்காளர்களின்

கவனத்தை ஈர்க்கும் வகையில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கான வழிமுறைகள், வாக்காளர் கட்டணமில்லா உதவி எண் 1950, மக்கள் அதிகம் நடமாடும் பகுதிகளில் வாக்காளர் உறுதிமொழி தொடர்பான விவரச் சுவரொட்டிகள், பதாகைகள், காட்சிப் பலகைகள் வைக்கப்பட்டன.

### 1.6. வாக்காளர் தேர்தல் நடைமுறையில் பங்கேற்க முறையான அறிவூட்டல் (SVEEP)

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களின்படி, தமிழ்நாட்டில் பொது மக்களிடையே வாக்காளராகப் பதிவு செய்வது மற்றும் சமீபத்தில் நடந்து முடிந்த மக்களவைத் தேர்தல், 2024-ல் மனசாட்சிப்படி '**சட்ட நெறிமுறைக்குட்பட்டு வாக்களிப்பது**' ஆகியவை குறித்துவிழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், பல்வேறு அரசுத் துறைகளானதமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, மெட்ரோஇரயில், அனைத்திந்திய வானொலி, தூர்தர்ஷன்

மற்றும் பலபொதுத்துறை நிறுவனங்கள் தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்துடனும் மாவட்ட அளவிலும் ஒருங்கிணைந்து பங்கேற்பாளர்களாக செயல்பட்டன.

மக்களவைபொதுத் தேர்தல் 2024ஐ முன்னிட்டுவாக்காளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதத்தில்தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் "சி-விஜில் (C-VIGIL)" மற்றும் "1950-வாக்காளர் உதவி எண்" என்ற விளம்பரங்கள் தமிழ்நாட்டின் முன்னணி நாளிதழ்களில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டன.

வாக்காளர் பங்கேற்பு என்பது தேர்தல் மேலாண்மையின் ஒருங்கிணைந்த பகுதியாகும். எனவே தேர்தல் ஆணையம், எவ்விதத் தூண்டுதலுமின்றி வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு "**தேர்தல் திருவிழா-தேசத்தின் பெருவிழா**" என்ற நோக்கத்துடன் கையெழுத்து

இயக்கம், பேரணிகள், கலை நிகழ்ச்சிகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

மேலும் அனைவரிடத்திலும் நம்பிக்கையேற்படுத்தும் வகையிலும், வாக்களிப்பினை ஊக்குவிக்கும் பொருட்டும் "C-VIGIL" என்ற செயலி விளம்பரப்படுத்தப்பட்டு, இதன் மூலம் தேர்தல் தொடர்பான புகார்கள் பெறப்பட்டு, அவற்றின்மீது குறித்த நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவது உறுதிசெய்யப்பட்டது.

மாவட்ட அளவில் வாக்காளர் விழிப்புணர்வு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு மாவட்ட அளவிலான குழு, மாவட்ட தேர்தல் அதிகாரி தலைமையிலும், பிற அரசுத் துறைகளை உறுப்பினர்களாகவும் கொண்டு அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டது. இக்குழுவானது மூன்றாம் பாலினத்தவர்கள், மாற்றுத் திறனாளிகள்,

மலைவாழ் மக்கள் ஆகியோரிடையே விழிப்புணர்வு பணியினை மேற்கொண்டது.

2. **மக்களவை பொதுத்தேர்தல் மற்றும் 233, விளவன்கோடு சட்டமன்ற இடைத்தேர்தல், 2024ன்போது மேற்கொள்ளப்பட்ட சில முக்கிய முன்முயற்சிகள்:**

**அ) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி (VVPAT)**

பாரத மின்னணுவியல் நிறுவனத்தின் (BEL) மூலம் தயாரிக்கப்பட்ட 1,58,892 எண்ணிக்கையிலான வாக்குப்பதிவு கருவிகள், 81,473 எண்ணிக்கையிலான கட்டுப்பாட்டு கருவிகள் மற்றும் 87,188 எண்ணிக்கையிலான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி (VVPAT) (M3) தமிழ்நாட்டில் உள்ளன.

2024-ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவை பொதுத் தேர்தலுக்காக பயன்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்களின் விவரம் பின்வருமாறு:

**மக்களவை தேர்தல், 2024:**

| இயந்திரத்தின் வகை (EVM Model) | வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்பட்ட இயந்திரங்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | வாக்குப்பதிவு கருவிகள் (BUs) | கட்டுப்பாட்டு கருவிகள் (CUs) | விவிபிஏடிகள் (VVPATs) |
| M-3 பாரத மின்னணுவியல் நிறுவனம் | 68,321 | 1,32,591 | 68,321 | 68,321 |

**233. விளவன்கோடு சட்டமன்ற இடைத்தேர்தல், 2024:**

| இயந்திரத்தின் வகை (EVM Model) | வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்பட்ட இயந்திரங்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | வாக்குப்பதிவு கருவிகள் (BUs) | கட்டுப்பாட்டு கருவிகள் (CUs) | விவிபிஏடிகள் (VVPATs) |
| M-3பாரத மின்னணுவியல் நிறுவனம் | 272 | 272 | 272 | 272 |

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, மேற்கண்ட தேர்தலில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்துடன் (EVMs) வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவியானது (VVPATs) அனைத்து வாக்குச் சாவடிகளிலும் பயன்படுத்தப்பட்டது.

ஆ) **நேரில் வர இயலாத வாக்காளர்களுக்கு தபால் வாக்கு அளிக்கும் முறை**

தேர்தல் நடத்தும் விதிகள் (திருத்தப்பட்டது) 2019 மற்றும் 2024-இன் படி இந்தியத் தேர்தல் ஆணையமானது வாக்களிக்க நேரில் வர இயலாத பின்வரும் வகையிலான வாக்காளர்களுக்கு தபால் வாக்குச் சீட்டு வசதியினை வழங்குகிறது:

i) மூத்தகுடிமக்கள் (85 வயதிற்கு மேற்பட்டவர்கள்)

ii) வாக்காளர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள மாற்றுத்திறனாளி வாக்காளர்கள்

iii) அத்தியாவசிய பணியில் உள்ள வாக்காளர்கள்

இவ்வசதியானது, 2024-ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவை பொதுத் தேர்தலின்போது நடைமுறைப்படுத்தப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வாக்களிக்க நேரில் வர இயலாத வாக்காளர்கள், தபால் மூலம் வாக்களிக்க விரும்பினால் தேர்தல் அறிவிப்பு வெளியான நாளில் இருந்து தேர்தல் அறிவிக்கை வெளியிடப்பட்ட ஐந்து நாட்களுக்குள் அனைத்து விவரங்களுடன் பூர்த்தி செய்யப்பட்ட படிவம் 12-D தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வழங்க வேண்டும்.

இதன்படி, மொத்தம் 1,16,146 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. தேர்தல் நடத்தும் அதிகாரியின் பரிசீலனைக்குப் பிறகு 1,16,146 தபால் வாக்குகள் வழங்கப்பட்டது. வாக்குப் பதிவு அலுவலர்கள் குழு ஒன்று, மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் வீடுகளுக்குச் சென்று தபால் வாக்கு பெறப்பட்டது. 1,08,849

வாக்குகள் வாக்களிக்க நேரில் வர இயலாத வாக்காளர்களிடமிருந்து பெறப்பட்டது. அதன்விபரம் பின்வருமாறு:

| வ. எண். | வகை | இவ்வகையில் உள்ள மொத்த வாக்காளர்கள் | வாக்காளர் -களுக்கு வழங்கப்பட்ட படிவம் 12D எண்ணிக்கை | வாக்காளர் -களிடம் இருந்து திரும்ப பெறப்பட்ட படிவம் 12D | வழங்கப் பட்ட தபால் வாக்குகளின் எண்ணிக்கை | வாக்களிக்க நேரில் வர இயலாத வாக்காளர் -களிடம் இருந்து பெறப்பட்ட தபால் வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1. | மூத்த குடிமக்கள் (85 வயதிற்கு மேல்) | 6,14,002 | 3,59,525 | 71,805 | 71,805 | 67,165 |
| 2. | மாற்றுத் திறனாளி வாக்காளர்கள் | 4,61,771 | 3,33,164 | 44,295 | 44,295 | 41,639 |
| 3. | அத்தியாவசிய பணியில் உள்ள நபர்கள் | 0 | 0 | 46 | 46 | 45 |
| மொத்தம் | | 10,75,773 | 6,92,689 | 1,16,146 | 1,16,146 | 1,08,849 |

இ) **செலவின கட்டுப்பாட்டுக்கான வழிமுறைகள்**

தேர்தல் ஆணையம், முறையற்ற வகையில் பணபலம் உபயோகிக்கப்படுவதைக் கட்டுப்படுத்தவும், நியாயமான மற்றும் நேர்மையான முறையில் தேர்தலை நடத்தவும், தேர்தல் செலவுக் கண்காணிப்பு முறையை ஏற்படுத்தியுள்ளது.

தேர்தல் செலவுக் கண்காணிப்பின் மீது இரு வழிகளில்கவனம் செலுத்தப்படுகிறது. முதலாவதாக அனுமதிக்கப்பட்ட, உண்மையாக சமர்ப்பிக்கப்படும் செலவினங்கள் பற்றிய அறிக்கை. இரண்டாவது, சட்டத்தினால் அனுமதிக்கப்படாத செலவின வகையாகும். தேர்தல் செலவுக் கண்காணிப்பு அமைப்பு உண்மையான செலவினங்கள் அனைத்தையும் வேட்பாளர்களின் கணக்கில் சேர்ப்பதுடன் தவறாக செயல்படுபவர்களின் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுப்பதுடன், தேவைப்படின் காவல்துறை மற்றும் சம்பந்தப்பட்ட குற்றவியல் நடுவர்கள்

முன்னிலையில் புகார் செய்யப்படுவதையும் உறுதி செய்கிறது.

மேற்கண்டவற்றை உறுதிப்படுத்துவதற்காக தேர்தல் செலவுக் கண்காணிப்புக்கென பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டன. 2024, மக்களவை பொதுத்தேர்தல்கள் மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 233. விளவன்கோடு தொகுதி இடைத்தேர்தல்களுக்காக, தமிழ்நாட்டில் 754 பறக்கும் படைகள், 718 நிலைக் கண்காணிப்புக் குழுக்கள், 383 காணொலி கண்காணிப்புக் குழுக்கள், 234 காணொலி பார்வையிடும் குழுக்கள் மற்றும் 234 கணக்குக் குழுக்கள் ஆகியவை அமைக்கப்பட்டன. மேலும் 58 செலவினப் பார்வையாளர்களும், 234 உதவி செலவினப் பார்வையாளர்களும் தேர்தல் செலவுக் கண்காணிப்புக்கென நியமிக்கப்பட்டனர். மேற்கண்ட குழுக்கள் 2024 தேர்தலின்போது, பணப் பறிமுதலுக்கான நிலையான

செயல்பாட்டு முறைகளைப் பின்பற்றி ரூ.179.95 கோடி மதிப்புள்ள பணம் மற்றும் ரூ.186.55 கோடி மதிப்புள்ள பிற பொருட்களை கைப்பற்றினர்.

**ஈ) தேர்தல் நடத்தை விதிமுறைகளைத் தீவிரமாக நடைமுறைப்படுத்துதல்**

இந்தியத் தேர்தல் ஆணையம் பொதுத் தேர்தல்களை நேர்மையான முறையில், சுதந்திரமான வழியில், நடத்த வேண்டும் என்ற உயரிய எண்ணத்தைக் கொண்டுள்ளது. இதன் தொடர்பாக, இந்தியத் தேர்தல் ஆணையம், தேர்தல் நடத்தை விதிமுறைகளை தீவிரமாக நடைமுறைப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

2024, மக்களவைத்தேர்தல்கள் மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 233.விளவன்கோடு தொகுதி இடைத்தேர்தல் கால அட்டவணை 16.03.2024 அன்று

அறிவிக்கப்பட்டவுடன் தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறைக்கு வந்தன.

உ) **மத்திய ஆயுத காவல் படையினர், மாநிலக் காவல் துறையினர், முன்னாள் இராணுவத்தினர், ஓய்வு பெற்ற காவலர்கள் மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள்**

பாதுகாப்புத் திட்டம் மற்றும் படைப் பரவலாக்கம் ஆகியவை நியாயமான மற்றும் அமைதியான தேர்தலை உறுதிப்படுத்தின. 2024மக்களவைபொதுத் தேர்தலை அமைதியாக நடத்துவதற்காக, பதற்றமான மற்றும் அதிக பதற்றமுடைய வாக்குச்சாவடிகளைக் கண்டறிந்து அவற்றின் மீது அதிகக் கவனம் செலுத்துவதற்காக 190கம்பெனி மத்திய ஆயுதப் பாதுகாப்புப் படையினர் பயன்படுத்தப்பட்டனர். மாவட்ட படைப்பரவலாக்கத்திட்டத்தின் அடிப்படையில், மண்டல அளவில் போதுமான நிலைப் படைகளைத் தேவையான

சுற்றுக்காவல் படைகளின் மூலம் வலுவூட்டி அனைத்து வாக்குச் சாவடிகளுக்கும் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டது. இது தவிர, மாநில பாதுகாப்புப் படையைப் பொறுத்தமட்டில், 70,608 வட்டம்/ஆயுதப்படை காவலர்கள் மற்றும் 7,110 தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினர் பயன்படுத்தப்பட்டனர். வாக்குப் பதிவு முடிவுற்ற பிறகு 15 கம்பெனி மத்திய ஆயுதப் பாதுகாப்புப் படையினர் தக்க வைத்துக் கொள்ளப்பட்டு 39வாக்கு எண்ணிக்கை மையங்களில் பணியமர்த்தப்பட்டனர்.

2024 மக்களவைபொதுத் தேர்தலின் போது காவலர்களின் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் பொருட்டு, 12,220 முன்னாள் ராணுவத்தினர் 1,931 ஓய்வு பெற்ற காவல்பணியாளர்களை தேர்தல் பாதுகாப்புப் பணிகளுக்காக 17.04.2024 முதல் 20.04.2024 வரை 4 நாட்களுக்கு நியமிக்கப்பட்டனர்.

ஊ) **பார்வையாளர்கள்**

2024,மக்களவைபொதுத் தேர்தலுக்காக, இந்தியத் தேர்தல் ஆணையம், 39 பொதுப் பார்வையாளர்கள், 20 காவல் துறை பார்வையாளர்கள், 58 செலவினப் பார்வையாளர்கள் மற்றும் ஒரு சிறப்பு செலவினப் பார்வையாளர் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டனர். மேலும் வாக்கு எண்ணும் பணிகளை மேற்பார்வையிட 58 பார்வையாளர்களும் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டனர்.

எ) **தேர்தல் நடத்தும் அதிகாரிகள், தேர்தல் மற்றும் வாக்கு எண்ணுகைப் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கான பயிற்சி**

2024, மக்களவை பொதுத் தேர்தலை திறம்பட நடத்துவதற்கு பல கட்டங்களாக தேர்தல் தொடர்பான பயிற்சிகள் கீழ்க்கண்டவாறு நடத்தப்பட்டது:

(i) இந்தியத் தேர்தல் ஆணையத்தில் பயிற்சி பெறுதல், (ii) மாநில தலைமையகத்தில் பயிற்சி பெறுதல், (iii) மாவட்ட அளவில் பயிற்சி பெறுதல். பல்வேறு படிநிலைகளில் இந்தியத் தேர்தல் ஆணையம், தலைமை தேர்தல் அதிகாரி மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரிகளால் கீழ்க்கண்டவாறு தேர்தல் அலுவலர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன:

| வ. எண் | தேர்தல் அலுவலர்கள் விவரம் | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை – பயிற்சிகளின் தொகுப்பு | பயிற்சி காலம் | பயிற்சியாளர்கள் |
|---|---|---|---|---|
| 1. | மாநில அளவிலான முதன்மை பயிற்சியாளர்கள் | நிலை 1 – 114/1 தொகுப்பு | 16 ஜூன்.2023 | தலைமை தேர்தல் அதிகாரி |
| | | நிலை 2 – 87/8 தொகுப்பு | 19 ஜூன் முதல் 8 ஜூலை 2023 வரை | இந்தியத் தேர்தல் ஆணையம் |
| | | நிலை 3 - 109/ 1 தொகுப்பு | 3 ஆகஸ்ட் 2023 வரை | தலைமை தேர்தல் அதிகாரி |
| 2. | மாநில அளவிலான முதன்மை பயிற்சியாளர் முதல் தேசிய முதன்மை பயிற்சியாளர் வரை | 35/ 5 தொகுப்பு | 21 முதல் 26ஆகஸ்ட் 2023 வரை | இந்தியத் தேர்தல் ஆணையம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | தேர்தல் நடத்தும் அலுவலர்கள் / மாவட்ட தேர்தல் அலுவலர் | 43/5 தொகுப்பு | 5 முதல் 19டிசம்பர் 2023 வரை | இந்தியத் தேர்தல் ஆணையம் |
| 4. | உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் | 468/5 தொகுப்பு | 2 ஜனவரி முதல் 9பிப்ரவரி 2024 வரை | இந்தியத் தேர்தல் ஆணையம் |
| 5. | தொகுதி அளவிலான முதன்மை பயிற்சியாளர்கள் | 2252/ மாவட்ட வாரியாக | பிப்ரவரி கடைசி வாரம் | மாவட்ட தேர்தல் அதிகாரி |
| 6. | துறை அலுவலர்கள் | 7224/ மாவட்ட வாரியாக | மார்ச் முதல் வாரம் | தேர்தல் நடத்தும் அலுவலர்கள் / உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் |
| 7. | ஊடகசான்றளிப்புமற்றும்கண்காணிப்புக்குழு | 266/ மாவட்ட வாரியாக | மார்ச் மூன்றாம் வாரம் | மாவட்ட தேர்தல் அதிகாரி / தேர்தல் நடத்தும் அலுவலர் |
| 8. | மாவட்ட வருவாய் அலுவலர் / கூடுதல் மாவட்ட நீதிபதி | 38/ மாவட்ட வாரியாக | மார்ச் முதல் வாரம் | தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட அளவிலான முதன்மை பயிற்சியாளர் |
| 9. | நடத்தை விதிகள் / தேர்தல் செலவின பார்வையாளர்கள் | 6084/ மாவட்ட வாரியாக | மார்ச் முதல் வாரம் | தேர்தல் நடத்தும் அலுவலர் / செலவின நுண் பார்வையாளர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | புகைப்பட கலைஞர்கள் | 1170/ மாவட்ட வாரியாக | மார்ச் இரண்டாம் வாரம் | தேர்தல் நடத்தும் அலுவலர்கள் / உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் |
| 11. | காவல்துறை அலுவலர்கள் | 7224/ மாவட்ட வாரியாக | மார்ச் முதல் வாரம் | தேர்தல் நடத்தும் அலுவலர்கள் / உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் |
| 12. | வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் | 68144/ மாவட்ட வாரியாக | மார்ச் இரண்டாம் வாரம் | உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் |
| 13. | தகவல் தொழில்நுட்ப அலுவலர்கள் (மாவட்ட அளவில்) | 911/ மாவட்ட வாரியாக | மார்ச் இரண்டாம் வாரம் | நிரலாளர் / தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு அலுவலர் |
| 14. | வாக்குச்சாவடி அலுவலர்கள் | 332233/ மாவட்ட வாரியாக | மார்ச் மூன்று மற்றும் நான்காம் வாரம் | தொகுதி அளவிலான முதன்மை பயிற்சியாளர்கள் / மாவட்ட அளவிலான முதன்மை பயிற்சியாளர்கள் / உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் |
| 15. | மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவியின் செயல்முறை பயிற்சி | 136288/ மாவட்ட வாரியாக | மார்ச் மூன்றாம் வாரம் | உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| 16. | மின்னணு முறையில் பரிமாறத்தக்க தபால் வாக்குகள் | **38/** மாவட்ட வாரியாக | 13 மே,,2024 | இந்தியத் தேர்தல் ஆணையம் |
| 17. | வாக்கு எண்ணும் அலுவலர் | **9362/** மாவட்ட வாரியாக | 23 மே, 2024 முதல் 25 மே,2024 வரை | தேர்தல் நடத்தும் அலுவலர்கள் / உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் |
| 18. | எண்ணுகைக்கான நுண் பார்வையாளர்கள் | **4524/** மாவட்ட வாரியாக | 24 மே, 2024 முதல் 27 மே, 2024 வரை | தேர்தல் நடத்தும் அலுவலர்கள் / உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் |

ஏ) **ஊடகங்களில் ஒளிபரப்பப்படும் அரசியல் விளம்பரங்கள் கண்காணிப்பு மற்றும் முன்-சான்றளிப்பு செய்வதற்காகவும், பணம் கொடுத்து செய்தி வெளியிடுவதை கண்காணிப்பதற்காகவும், மாநில மற்றும் மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுக்களை அமைத்தல்**

தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்திலும், ஒவ்வொரு மாவட்ட தேர்தல் அலுவலர்களின் அலுவலகங்களிலும், ஓர் ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு, அதன் மூலம்

தொலைக்காட்சி / வானொலி மற்றும் சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் அரசியல் சார்ந்த விளம்பரங்கள் கண்காணிக்கப்படுகின்றன. இக்குழுக்கள் அரசியல் சார்ந்த விளம்பரங்களை செய்தித்தாள் / வானொலி / தொலைக்காட்சி / கேபிள் சேனல்கள் மற்றும் அனைத்து சமூக வலைதளங்களில் வெளியிடுவதற்கு முன்னரே தணிக்கை செய்து சான்றளிக்கும் அதிகாரம் பெற்றவை. மாவட்ட அளவிலான குழுக்கள், அரசியல் சார்ந்த விளம்பரங்களைக் கண்காணிப்பதுடன், அவை தொடர்பாக வரப்பெறும் புகார் மனுக்களின் மீதும், ஊடகங்களில் பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்திகள் மீதும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. மாவட்ட அளவில் இப்புகார் மனுக்களின் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ள மாநில அளவிலான குழுவிடம் மேல்முறையீடு செய்யலாம்.

ஏ(1) **தகவல் தொழில்நுட்பப்பயன்பாடுகள்**

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்திலும், அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளின் அலுவலகங்களிலும், உபகரணங்கள், மனிதவளம் மற்றும் தேவையான உள்கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஏ(2) **தகவல் தொழில் நுட்பம்**

2024, மக்களவை பொது தேர்தல்கள்மற்றும் 233.விளவன்கோடுசட்டமன்ற இடைத்தேர்தல்போது கீழ்க்கண்ட செயலிகள் பயன்படுத்தப்பட்டன:

**அ. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் IT & ICT முயற்சிகள்**

1. என்கோர் மனுதாக்கல்
2. என்கோர் / சுவிதா அனுமதிகள்
3. C-VIGIL

4. ESMS - தேர்தல்களின்போது நடைபெறும்பறிமுதல் கண்காணிப்பு அமைப்பு

5. EMS- வாக்கு பதிவு இயந்திர மேலாண்மை அமைப்பு

6. ETPBS – தபால் வாக்குகளை மின்னணு முறையில் மாற்றுவதற்கான ஏற்பாட்டு முறை

7. வாக்கு பதிவு நிலவரம் குறித்த கைபேசி செயலி

8. மாற்றுத் திறனாளிகளுக்கான சக்சம் கைபேசி செயலி

9. என்கோர்–எண்ணுதல்

10. என்கோர்/ EEMS (தேர்தல் செலவு கண்காணிப்பு அமைப்பு)

11. NGSP- தேசிய குறை தீர்க்கும் சேவை தளம்

## ஆ. தலைமைத் தேர்தல் அதிகாரியின் IT & ICT முயற்சிகள்

1. மனுதாக்கல் -தலைமைத் தேர்தல் அதிகாரியின் தளம்

2. தலைமைத் தேர்தல் அதிகாரி இணைய தளத்தில் பார்வை மாற்று திறனாளி குடிமக்கள் அணுகக்கூடிய வகையான படிவம் 7A

3. தொகுதி / வேட்பாளர் அறிந்துகொள்ளும் தளம்

4. தபால் வாக்குகள் அளித்தல் மற்றும் பெறுதலை ஆன்லைன் மூலம் கண்காணிக்கும் தளம்

5. நட்சத்திர பேச்சாளர்கள் அனுமதிகள்

6. EVM/VVPAT குறித்த விழிப்புணர்வு கண்காணிப்பு

7. முறையாக வாக்காளர்களுக்கு அறிவூட்டல் மற்றும் தேர்தல் நடைமுறையில் பங்கேற்பு நிகழ்வுகள் (SVEEP)குறித்த விழிப்புணர்வு

8. தினசரிதேர்தல்நடத்தை விதிமுறைகள்/ பறிமுதல் அறிக்கைகள் பெறுதவற்கான தலைமைத் தேர்தல் அதிகாரியின் தளம்

9. ஊடகங்களில் ஒளிபரப்பப்படும் அரசியல் விளம்பரங்கள் கண்காணிப்பு மற்றும் சான்றளிப்பு செய்வதற்காகவும், பணம் கொடுத்து செய்தி வெளியிடுவதை கண்காணிப்பதற்காகவும், மாநில மற்றும் மாவட்ட அளவிலான கண்காணிக்கும் வலைதளம்.

10. வாக்குப்பதிவு பணியாளர்களை சீரமைத்தல்

11. காவல் பணியாளர்களை சீரமைத்தல்

12. நுண்பார்வையாளர்களை சீரமைத்தல்

13. எண்ணுகை பணியாளர்களை சீரமைத்தல்

14. கருடா - பறக்கும் படைகள்/நிலையான கண்காணிப்புக் குழுக்கள், EVM/VVPAT வாகனங்கள் கண்காணிப்பு

15. PMS (வாக்கெடுப்பு கண்காணிப்பு அமைப்பு)

16. வாக்குச் சாவடி- வரிசை நிலை

**17.** தேர்தல் நடைமுறைகள் இணைய ஒளிபரப்பு

ஏ(3) **மாநில தொடர்பு மையம் (SCC)**

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தில், அழைப்புகளை ஏற்பதற்காக ஒரு நிரந்தர 3 இருக்கைகள் கொண்ட மாநில தொடர்பு மையம் கட்டணமில்லா எண் 1800 4252 1950-உடன் வருடம் முழுவதும் செயல்பட்டு வருகிறது.

ஏ(4) **மாவட்ட தொடர்பு மையம் (DCC)**

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகத்தில், அழைப்புகளை ஏற்பதற்காக ஒரு நிரந்தர 2 இருக்கைகள் கொண்ட மாநில தொடர்பு மையம்

கட்டணமில்லா எண் 1950-உடன் வருடம் முழுவதும் செயல்பட்டு வருகிறது.

ஏ(5) **GPS அடிப்படையிலான வாகன கண்காணிப்பு அமைப்பு**

2024 மக்களவை பொது தேர்தல்கள்மற்றும் 233.விளவன்கோடுசட்டமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தல்களின் போது பறக்கும் படைகள்/ நிலையான கண்காணிப்புக் குழுக்கள், காணொலி கண்காணிப்பு குழுக்கள், EVM/ VVPAT போக்குவரத்து ஆகியவற்றில் ஈடுபடுத்தப்பட்ட வாகனங்கள், மண்டல குழு வாகனங்கள், EVM மீள பெறப்படும் வாகனங்கள் இருப்பிடத்தை கண்காணிக்கும் பொருட்டு வாகன கண்காணிப்பு அமைப்பு ஒப்பந்தப்புள்ளி மூலம் செயல்படுத்தப்பட்டது.

ஏ(6) **இணைய ஒளிபரப்பு**

2024 மக்களவைபொதுத் தேர்தல் மற்றும் 233.விளவன்கோடு சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்

தேர்தலின் போது 44,801 (பிரச்சனைகளால் பாதிக்கப்படக்கூடிய மற்றும் மிகவும் பதற்றமான 8,137 வாக்குச்சாவடிகள் உள்பட) வாக்குச் சாவடிகளில் இணைய ஒளிபரப்பு செய்யப்பட்டது.

ஏ(7) **வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை விநியோகம்**

இந்தியத் தேர்தல் ஆணைய கடித எண்.22/2/INST/ECI/FUNC/ERO/ ER/2014, நாள்.07.04.2017-இல் கூறப்பட்ட வழிகாட்டுதல்களின்படி, இத்துறை இம்மாநிலத்தில் முதல் முறையாக இந்திய அஞ்சல் துறையின் விரைவு அஞ்சல் சேவை மூலம் வாக்காளர்களுக்கு PVCவாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகளை அவர்களின் இல்லத்திற்கே சென்று வழங்குவதற்கான ஏற்பாட்டினை செய்தது. அதன்படி சிறப்பு சுருக்க முறைத் திருத்தம் 2024-இன் போது, 17,76,237 PVC வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் அச்சிடப்பட்டு

இந்திய அஞ்சல் துறையின் விரைவு அஞ்சல் சேவை மூலம் வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. தொடர்ச்சியான புதுப்பித்தல் காலத்தில் (Continuous Updation Period) (அதாவது, 10.12.2023 முதல் வேட்புமனு தாக்கலுக்கு 10 நாட்களுக்கு முன்னர் வரை) 9,15,548 PVC வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் அச்சிடப்பட்டு வாக்காளர்களுக்கு இந்திய அஞ்சல் துறையின் விரைவு அஞ்சல் சேவை மூலம் விநியோகிக்கப்பட்டன.

ஏ(8) **வாக்காளர் தகவல் சீட்டுகள்**

புகைப்பட வாக்காளர் சீட்டிற்கு பதிலாக வாக்காளர் தகவல் சீட்டினை வாக்காளர்களுக்கு வழங்க இந்தியத் தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, வாக்காளர் சீட்டுகளின் விநியோகம் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள்

மூலம்வாக்குப்பதிவு நாளுக்கு ஐந்து நாட்களுக்கு முன்னர் (அதாவது) 13.04.2024 அன்று நிறைவடைந்தது.

ஏ(9) **பிரெய்லி வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகளின் விநியோகம்**

இந்தியத் தேர்தல்ஆணையத்தின் கடித நாள் 19.03.2019-ல் பார்வை குறைபாடுள்ள அனைத்து வாக்காளர்களுக்கும் பிரெய்லி வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்க அறிவுறுத்தியுள்ளது. பிரெய்லி சிறப்பு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகளை 13.04.2024, வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் மூலம் அனைத்து மாவட்டங்களுக்கும் 15,503 பார்வை திறன் குறைபாடுள்ள வாக்காளர்களுக்குவிநியோகிக்கப்பட்டது. (2021-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற பேரவை பொதுத் தேர்தலின் போது 45,137 பிரெய்லி சிறப்பு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டன).

ஏ(10) **பிரெய்லி வாக்காளர் தகவல் சீட்டு விநியோகம்**

சாதாரண வாக்காளர் சீட்டுடன் கூடுதலாக பிரெய்லி வசதிகள் இடம் பெற்ற புகைப்பட வாக்காளர் சீட்டினையும் பார்வை குறைபாடுள்ள வாக்காளர்களுக்கு அச்சிட்டு விநியோகம் செய்ய இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. 66,014 பிரெய்லி பிரத்யேக வாக்காளர் சீட்டுகள் விநியோகம் 13.04.2024 அன்றுடன்நிறைவடைந்தது.

**3. 2024-2025-இன் முக்கிய நிகழ்வுகள்**

**01..01.2025-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்ட வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தம் மற்றும் தேசிய வாக்காளர் தினம், 2025**

பொதுவாக வாக்காளர் பட்டியலின் வருடாந்திர திருத்தமானது ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதல் தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது. குடிமக்கள், வாக்காளர் பட்டியலில்

பதிவு செய்வதற்குரிய தகுதியேற்படுத்தும் நாள் குறித்து, 1950-ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்பிரிவு 14(b)-இல் திருத்தம் செய்யப்பட்டது. இதன்படி, 2023-ஆம் ஆண்டு சிறப்பு சுருக்கமுறைத் திருத்தத்திலிருந்து ஜனவரி 1-ஆம் தேதி, மட்டுமல்லாது தகுதியேற்படுத்தும் நாள் ஜனவரி 1, ஏப்ரல் 1, ஜூலை 1 மற்றும் அக்டோபர் 1 ஆகிய நான்கு தகுதியேற்படுத்தும் நாள்கள் என்று நடைமுறைப்படுத்தப்பட்டது,இச்சுருக்க முறைத் திருத்தத்துடன் விரிவான "வாக்காளர் தேர்தல் நடைமுறையில் பங்கேற்க முறையான அறிவூட்டல்" (Systematic Voters Education and Electoral Participation) (SVEEP) பரப்புரை செய்யப்படுகிறது. இந்தியத் தேர்தல் ஆணையத்தால் உருவாக்கப்பட்டுள்ள மக்களாட்சி மற்றும் தேர்தல் மேலாண்மைக்கான இந்திய சர்வதேசப் பயிற்சி நிறுவனத்தில் (India International Institute of Democracy

and Election Management(IIIDEM)) மூலம் தலைமை பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்கள் மூலம் உரிய அலுவலர்களுக்கு வாக்காளர் பட்டியல் திருத்தம் குறித்த பல கட்டப் பயிற்சிகளும் வழங்கப்படும். இதனைத் தொடர்ந்து, தேசிய வாக்காளர் தினம் 25.01.2025-ல் கொண்டாடப்படும்.

**4. நிதி ஒதுக்கீடு**

தேர்தல் செலவுகளுக்கான நிதி ஒதுக்கீடு "2015.00. தேர்தல்கள்" என்ற பெருந்தலைப்பின்கீழ் மானியக் கோரிக்கை எண். 38.02.இல் இடம் பெற்றுள்ளது. 2024-2025 ஆம் நிதி ஆண்டில், தேர்தல் பணிகளுக்காக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள், 01.01.2025-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக்கொண்டு மேற்கொள்ளப்படவுள்ள புகைப்பட வாக்காளர் பட்டியல் தயாரித்தல், திருத்தம் மேற்கொள்ளுதல்

மற்றும் புகைப்பட வாக்காளர் பட்டியல் அச்சிடுதல், புகைப்பட வாக்காளர் அடையாள அட்டை வழங்குதல் மற்றும் மக்களவைபொதுத்தேர்தல், 2024 ஆகிய செலவினங்களுக்காக ரூ.1009,84,46,000/- (ரூபாய் ஆயிரத்து ஒன்பது கோடியே எண்பத்து நான்கு இலட்சத்து நாற்பத்து ஆறாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன செலவினங்களுக்கான மதிப்பீடுகள் சில முக்கிய இனங்களுக்கு தலைப்பு வாரியாக கீழே விவரமாக விவரிக்கப்பட்டுள்ளன:

**4.1) 102. தேர்தல் அதிகாரிகள்**

**AA. சட்டமன்றப் பேரவை மற்றும் மக்களவைத் தொகுதிகள்**

தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் மாவட்டத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் தேர்தல் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் ஆகியோரின் ஊதியம் மற்றும் படிகள், பயணச் செலவுகள்,

அலுவலகச் செலவினம், சில்லரைச் செலவினம், தொலைபேசிக் கட்டணங்கள் முதலான செலவினங்கள் இத்துணைக்கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. 2024-2025-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ.35,10,61,000/- (ரூபாய் முப்பத்தைந்து கோடியே பத்து இலட்சத்து அறுபத்து ஓராயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.இச்செலவினங்களில் 50 சதவீதத்தினை ஒன்றிய அரசு திரும்ப அளிக்கும்.

**4.2) 103. புகைப்பட வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்**

**AA. சட்டமன்றப் பேரவைத் தொகுதிகள்**

இம்மாநிலத்திலுள்ள அனைத்து சட்டமன்றப்பேரவைத் தொகுதிகளின் புகைப்பட வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்தல், திருத்துதல் மற்றும் அச்சிடுவதற்கான செலவினங்கள் இத்துணைத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும்.

இப்பணிக்காக நியமிக்கப்படும் தற்காலிக பணியாளர்களின் சம்பளம் மற்றும் படித்தொகைகள், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு வழங்கப்படும் உழைப்பூதியம், எழுதுபொருள், அச்சிடும் செலவுகள் ஆகியவையும் இத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். மேலும், தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களை பராமரிப்பதற்காக நிரந்தர அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ள ஓர் உதவியாளர் மற்றும் ஒரு பதிவுரு எழுத்தர் ஆகியோருக்கு ஊதியம் மற்றும் படித்தொகைகள் இத்துணைக்கணக்குத் தலைப்பின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும். தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பு, வாக்காளர் பட்டியல் தரவுதளத்தை பராமரித்தல்மற்றும் தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டங்கள் ஆகிய செலவினங்களும்

இத்துணைக்கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2024-2025-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ.159,81,84,000/-(ரூபாய் நூற்றுஐம்பத்தொன்பது கோடியே எண்பத்தொருஇலட்சத்து எண்பத்துநான்காயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் 50 சதவீதத்தினை ஒன்றிய அரசு திரும்ப அளிக்கும்.

**AC. மேலவைத் தொகுதிகள்**

மேலவைத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் அச்சிடுதல் ஆகிய செலவினங்கள் இத்துணைக்கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2024-2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.3) 104. மக்களவைக்கும் மாநில சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

### AA. மக்களவைக்கும் சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் நடைபெறும் தேர்தல்கள்

மக்களவை மற்றும் சட்டமன்றப் பேரவைக்கு தேர்தல்கள் நடைபெறும்போது பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகள் ஆகியன ராணிப்பேட்டை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள தமிழ்நாடு வேளாண்பொருள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களிலும், விழுப்புரம், தூத்துக்குடி, கள்ளக்குறிச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களிலுள்ள தமிழ்நாடு சேமிப்பு கழக நிறுவன கிடங்குகளிலும், தென்காசி மாவட்டத்திலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், திருப்பத்தூர் மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர் வேளாண் உற்பத்தி

கூட்டுறவு விற்பனை சங்கம், திருப்பத்தூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள மறைமலை நகர் நகராட்சி அலுவலத்திலும் வைக்கப்பட்டுள்ளன. இக்கிடங்குகளுக்கான வாடகைக் கட்டணம் வழங்குவதற்கான செலவுகள் மேற்கண்ட இத்துணைக்கணக்குத் தலைப்பின்கீழ்செலவிடப்படும்.2024-2025ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.2,66,16,000/- (ரூபாய் இரண்டுகோடியே அறுபத்தாறுஇலட்சத்து பதினாறாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.இச்செலவினங்களில் 50 சதவீதத்தினை ஒன்றிய அரசு திரும்ப அளிக்கும்.

**4.4) 105. மக்களவைத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

**AA. இடைத்தேர்தல்**

மக்களவைத் தொகுதிகளில் நடைபெறும் இடைத்தேர்தல் தொடர்பான அனைத்து செலவினங்களும்

இத்துணைக்கணக்குத்தலைப்பின்கீழ் பற்றுவைக்கப்படும். 2024-2025-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் ரூ.17,000/- (ரூபாய் பதினேழாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், தற்பொழுது தமிழ்நாட்டில்மக்களவை தொகுதிகளில் காலியிடம் ஏதுமில்லை.

**AB. மக்களவைத் தேர்தல்**

மக்களவைக்கான பொதுத்தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் அனைத்தும் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. 18-வது மக்களவை பொதுத் தேர்தல் 19.04.2024 அன்று நடைபெற்றது. 2024, மக்களவைபொதுத்தேர்தலுக்காக, தற்காலிக ஊழியர்களின் சம்பளம், படிகள் மற்றும் பயணப்படிகள், பிரிவு எழுத்தர்களுக்கான கூலி, தேர்தல் பணிகளில் ஈடுபட்ட அதிகாரிகள் மற்றும்

பணியாளர்களுக்கான மதிப்பூதியம், தொலைபேசிக் கட்டணங்கள், மிக முக்கியமான நிகழ்வுகளைப் புகைப்படம் எடுத்தல் போன்றவற்றுக்கான இதர சில்லரைச் செலவினங்கள், தேர்தல் பார்வையாளர்களுக்கான செலவினங்கள், வாக்குச்சாவடி வாக்குப்பதிவினை நேரடியாக பதிவு செய்தல் மற்றும் குறுந்தகவல் மூலம் வாக்குப்பதிவை கண்காணித்தல் தொடர்பான செலவினங்கள் இத்துணைக்கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். தேர்தல் நடத்தை விதிமுறைகளை செயல்படுத்தவும், தேர்தல் செலவுகளைக் கண்காணிக்கவும் பறக்கும்படை, வீடியோ கண்காணிப்புக்குழு, நிலையான கண்காணிப்புக் குழு மற்றும் கணக்கு மதிப்பீட்டுக் குழு போன்ற பல குழுக்கள் கண்காணிப்பதற்காக ஏற்படுத்தப்படுகின்றன. GPS அடிப்படையில் வாகன கண்காணிப்பு அமைப்பதற்கான செலவு மற்றும் மின்னணு

வாக்குப்பதிவு இயந்திரத்தின் மூலம் வாக்களிப்பது குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த தேர்தல் நாளன்று செய்யப்படும் விளம்பரத்திற்கான செலவினம், வாக்கு எண்ணும் மையங்களில் மேற்கொள்ளப்படும் தடுப்புகள் மற்றும் மின்விளக்கு வசதிகளுக்கான செலவினம், தேர்தலுக்குத் தேவையான பொருட்கள், எழுதுபொருட்களுக்கான செலவினம், "வாக்காளர் தேர்தல் நடைமுறையில் பங்கேற்க முறையான அறிவூட்டல்" பிரச்சாரத்திற்கான செலவினம், வாக்குப்பதிவு மற்றும் எண்ணிக்கையில் ஈடுபடும் அலுவலர்கள் மற்றும் பாரத மின்னணு (BEL) நிறுவன தொழில்நுட்ப அலுவலர்களுக்கான உழைப்பூதியம், மத்திய துணை இராணுவப்படை மட்டுமின்றி, ஓய்வுபெற்ற காவல் அதிகாரிகள் மற்றும் முன்னாள் இராணுவவீரர்களுக்கு வழங்கப்படும் உழைப்பூதியம் ஆகியவையும் இத்துணைத்

தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படும். தேர்தலின்போது பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் எரிபொருள், எண்ணெய் மற்றும் மசகுப்பொருட்களுக்கான செலவு, அச்சுக்கட்டணம் ஆகியவையும் இத்துணைக்கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும்.

2024-2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் மக்களவைத் தேர்தலுக்கான செலவினத்தொகை ரூ.796,19,97,000/- (ரூபாய் எழுநூற்றி தொண்ணூற்று ஆறு கோடியே பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரம் மட்டும்)ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொதுத்தேர்தல் தொடர்பான அனைத்து செலவினங்களையும் ஒன்றிய அரசே ஏற்கின்றது. இச்செலவினங்கள் அனைத்தும் முதலில் இத்துணைக்கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டு,

பின்னர் ஒன்றிய அரசிடமிருந்து முழுமையாக திரும்பப்பெறப்படும்.

**4.5) 106. மாநில சட்டமன்றப் பேரவை தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

**AA. மாநில சட்டமன்றப் பேரவை**

மாநில சட்டமன்றப் பேரவைக்கு நடைபெறும் பொதுத்தேர்தல்கள் மற்றும் மாநில பேரவைக்கான இடைத்தேர்தல்கள் இத்துணைக்கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2024-2025ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் ரூ.5,28,000/- (ரூபாய் ஐந்து இலட்சத்து இருபத்தெட்டாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.இத்துணைத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்து செலவினங்களையும் மாநில அரசே ஏற்கும்.

233. விளவன்கோடு சட்டமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி. S. விஜயதரணி அவர்கள்

24.02.2024 அன்று சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகியதன் காரணமாக, மேற்காணும் சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தல், மக்களவைக்கான பொதுத் தேர்தலுடன் 19.04.2024 அன்று நடைபெற்றது. வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணுகைப் பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட பணியாளர்களுக்கான ஊதியம், வாக்கு எண்ணிக்கை மையங்களில் தடுப்பு அரண் அமைத்தல், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVMs) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகள் (VVPATs) ஆய்வுமேற்கொள்ள ஈடுபடுத்தப்பட்ட தொழில்நுட்பப் பணியாளர்களின் ஊதியம் மற்றும் இதர செலவினங்களுக்காக ரூ.93,83,000/- (ரூபாய் தொண்ணூற்று மூன்று இலட்சத்து எண்பத்து மூன்றாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டது .

அதன் பின்னர், 75. விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. நா. புகழேந்தி, அவர்கள் 06.04.2024 அன்று காலமானதைத் தொடர்ந்து, இந்தியத் தேர்தல் ஆணையம் 10.06.2024அன்றுஅத்தொகுதிக்கு இடைத்தேர்தலுக்கான அட்டவணையை வெளியிட்டுள்ளது. மேற்காணும் 75. விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு 10.07.2024 அன்றும், வாக்கு எண்ணிக்கை 13.07.2024 அன்றும் நடைபெறவுள்ளது.

**AB. மாநில சட்டமன்ற மேலவை**

மாநில சட்டமன்ற மேலவைத் தேர்தலுக்கான செலவினங்கள் இத்துணைக்கணக்குத் தலைப்பின்கீழ் பற்றுவைக்கப்படும். 2024-2025ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ.2,00,16,000/- (ரூபாய் இரண்டு

கோடியே பதினாறாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.6) 108. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்**

**AA. வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம்**

வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்குவதற்கான செலவினம் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2024-2025ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 14,00,17,000/- (ரூபாய் பதினான்கு கோடியே பதினேழாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தில்50 சதவீதத்தினை ஒன்றிய அரசு திரும்ப அளிக்கும்.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் தலைமையின்கீழ் செயல்படும் முழு தேர்தல் நிர்வாக அமைப்பும், தனது பொறுப்பினை முற்றிலும் உணர்ந்துகொண்டு, பிழைகளற்ற

வாக்காளர் பட்டியல்களைத் தயாரிக்கவும், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இந்த மிகப்பொறுப்பான குறிக்கோளை அடைவதற்குத் தேவையான முழு ஒத்துழைப்பையும் இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு தமிழக அரசு வழங்கி வருகின்றது.

**துரைமுருகன்**

**நீர்வளத்துறைஅமைச்சர்**